1971 ஜூன் 19]

Airport for Salem.

*5. *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government has renewed its request to Central Government for establishing an Airport at Salem : and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) சேலத்தில் உருக்கு ஆலை ஒன்றை அமைப்பதை முன்னிட்டு அங்கு விமானதளம் கட்டுவதற்கான உடனடித் தேவையை இந்த அரசு வலியுறுத்தியுள்ளது. அந்த விமானதளத்தில் குறைந்த அளவ போக்குவரத்துக்கும் இந்த அரசு உத்திரவாதம் அளித்துள்ளதோடு, சேலத்திற்கு விமானப்பணியைத் தொடங்குவதில் விரயம் ஏதேனும் ஏற்பட்டால் அதில் ஒரு பகுதியை மாநில அரசு ஏற்கும் என்றும் தெரிவித்துள்ளது. தேவையான ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை களைப் பணிந்தனுப்பும்படி இந்திய ஏர்லைன்ஸ் நிறுவனத்தையும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து பொது இயக்குநரையும் கேட்டுக் கொண்டுள்ளதாக மத்திய சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

Dr. H. V. HANDE : Sir, the question was originally tabled by me about two years ago in connection with the promise given by the Minister for Aviation, Dr. Karan Singh, in the Consultative Committee, that the proposal regarding the construction of an aerodrome in Salem would be sympathetically considered during the Fifth Plan period. May I know whether that promise holds good now and whether there is a possibility of that proposal being implemented during the current Plan period itself instead of during the Fifth Plan period, in view of the fact that we are going to have a Steel Plant at Salem shortly ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியதைப்போல் வாக்குறுதி இருப்பதாகத் தகவல் இல்லை. நாங்கள் வற்புறுத்தி இரண்டு, மூன்று கடிதங்கள் எழுதியதற்கு, சேலத்திலும், தூத்துக்குடியிலும் கட்ட வேண்டுமென்பதற்கு ஒரு அனுதாபமான பதில் வராததால் மீண்டும் வற்புறுத்திய பிறகுதான் இந்த மாதிரி நடவடிக்கை எடுக்கும்படி மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, வேலூர் சி.எம்.சி. ஹாஸ்பிடல் பெரிய ஹாஸ்பிடல். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் வியாதியஸ்தர்கள் அங்கு வருகிறார்கள். எனவே, மிக அவசரமான கேஸ்களை எடுத்துச் செல்வதற்கு வேலூரில், ஏற்கெனவேயிருக்கும் விமானதளத்தை விமானப் போக்குவரத்திற்குத் தக்கதாய்ச் செய்ய மாநில அரசு மத்திய சர்க்காரிடத்திலே மீண்டும் வற்புறுத்துமா என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நல்ல யோசனை. ஆனால் சி.எம்.சி. மருத்துவமனைக்காக என்று எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இல்லை. பொதுவாகச் சிலயிடங்களில் விமானதளம் அமைக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில், குறிப்பாக தூத்துக்குடியிலும், சேலத்திலும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நம்முடைய அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

Thiru K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, even after an increase of 15 per cent in the air fare, does the Hon. Minister expect air travel to be popular in the South ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இன்னும் அதிகமான பயணிகள் விமானத்தில் பிரயாணம் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சேலம், தூத்துக்குடி என்று சொன்னார்கள். தூத்துக்குடி விமான நிலையம் சம்பந்தமாக மத்திய அரசு என்ன பதில் சொல்லியிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதே பதிலைத்தான் அதற்கும் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. பெ. மலைச்சாமி : சென்னையில் இரண்டாவது விமான நிலையம் அமைக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய குறிப்பு இல்லை.

திரு. எம். தேவராசன் : உதகைக்கு ஆண்டுதோறும் ஏராளமாக உல்லாசப் பயணிகள் அடிக்கடி வந்து போவதால், அங்கு விமான தளம் அமைக்க உத்தேசம் உள்ளதா? ஏற்கெனவே அந்த மாதிரித் திட்டம் இருந்து கைவிடப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபோன்ற செயற் குறிப்பு இல்லை.

Dr. H. V. HANDE : The Hon. Minister in his answer said that he had not received any encouraging reply. Later on some other reply seems to have been given. May I know from the Hon. Minister whether any categorical reply has been received from Dr. Karan Singh by this Government, and if so, the contents of the letter ?

The Hon. Thiru S. J. SADIQ PASHA : In July 1970, this Government again stressed the need for an aerodrome in Salem in view of the setting up of a plant there. This was also followed up with an offer to the Union Minister for giving guarantee for the minimum traffic and for subsidising the loss, if any, in the operation of air services to Salem. The Union Minister has informed that the IAC and DGCA have been asked to carry out necessary surveys and submit reports. Meanwhile, the Controller of Aerodromes (Madras Region), has proposed to inspect the suitable sites for location of the aerodrome shortly.

திரு. கோவை செழியன் : இந்தியன் ஏர்லைன்ஸ், ஏர் இந்தியா போன்ற கம்பெனிகள் தவிர, சில தனிப்பட்டவர்கள் சிறிய விமான சேர்விஸ்களை கோவையிலிருந்து ஊட்டி, கோவையிலிருந்து சேலம் போன்ற பகுதிகளுக்கு விட மத்திய அரசுக்கு விண்ணப்பித்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது. தகவல் தமிழக அரசுக்குத் தெரியுமா? தமிழக அரசு சிபாரிசு செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய தகவல் இல்லை. தனிப்பட்ட ஒருவர் என்னைச் சந்தித்து அதுபோன்ற முயற்சி எடுத்துக் கொள்ளுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: அமைச்சர் அவர்கள் எந்த இடத்தில் இந்த விமான நிலையம் அமைக்கப்படும் என்று தெளிவாகப் பதில் தரவில்லை. இந்தியன் ஏர்லைன்ஸ் கார்ப்பரேஷன் சர்வே முடித்து விட்டார்களா? எவ்வளவு நாளைக்குள்ளாகத் தளம் அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது இருக்கும் நிலைமையின்படி சர்வே செய்யச் சொல்லியிருக்கிறார்கள். எப்போது வரும் என்ற உறுதியான பதில் மத்திய அரசாங்கத்திடம் இருந்து வரவில்லை.

THIRU K.S. KOTHANDARAMIAH : Some time back, there was a proposal to construct aerodromes in each district head-quarters. Is that proposal still under consideration of the Government, or has it been given up ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபோன்ற செயற் குறிப்பு இல்லை.

திரு. இரா. இராமலிங்கம் : தூத்துக்குடி பக்கத்தில் உள்ள கயத்தாறு விமான நிலையம் மீண்டும் புதுப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அங்கிருந்து விமானப் போக்குவரத்து நடைபெற்றால் புதுப்பிக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா: தஞ்சை நகரத்தை அடுத்த பகுதியில் சிலபல ஆண்டுகளுக்கு முன்னால் விமான தளம் உருவாக்கப்பட சிலபல லட்சம் செலவழிக்கப்பட்ட பிறகும்கூட செயல்படுத்தப்படாமல் கைவிடப் பட்டிருக்கிறதே, தொடர்ந்து செயல்படுத்தி வைக்க அரசு ஆவன செய்ய முன் வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திரு கிட்டப்பா அவர்களுக்கு நான் அளிக்க விரும்பும் பதில் "அது இப்போது கிட்டாதப்பா" என்பது தான். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(4) 1971–72-ம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டம் அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1971–72-ம் ஆண்டுக்கான திருத்தப் பட்ட வரவு-செலவுத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, 1971–72-ம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதி நிலை மதிப்பீடு களையும்,* 1969–70-ம் ஆண்டின் கணக்குகளையும்,* 1970–71-ம் ஆண்டிற் குரிய திருத்த மதிப்பீட்டையும்* இப்பேரவையின் கண் வைக்க நான் முன் வந்துள்ளேன்.

1971–72-ம் ஆண்டிற்கான இடைக்கால நிதி நிலை மதிப்பீடுகள், 1971 மார்ச் திங்களில் இப்பேரவையின் முன் வைக்கப்பட்டு, அரசுத் துறையில் தொடர்ந்து ஏற்படும் செலவினங்களை ஏற்கும் வகையில் கணக்கு வாக் களிப்பிற்கு (Vote on Account) அவையின் ஒப்புதல்பெறப் பட்டது. அதைத் தொடர்ந்து, புதிய திட்டங்கள் உட்படப் பல்வேறு வளர்ச்சித்திட்டங்களைச் செயல்படுத்திட நாம் மேற்கொள்ள இருக்கும் முற்போக்குப் பணிகளை அறிவிக்கும் வகையில், இந்தத் திருத்தப்பட்ட நிதி நிலை மதிப்பீடுகள் அமைந்துள்ளன.

---

*48–76-ம் பக்கங்களில் இணைப்புகள் அச்சிடப்பட்டுள்ளன.

77–128-ம் பக்கங்களில் முதலமைச்சரவர்களுடைய உரையின் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைப்புகளும் அச்சிடப்பட்டுள்ளன.